DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 73/2024 Crime No. 408/2023 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW1-வீரப்பன் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 19.03.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் கேசரிமங்களத்தில் கிராமம் குப்பிச்சிபாளையத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்காரர்கள். கடந்த 26.10.2023ம் தேதியன்று இரவு சுமார் 09.00 மணியளவில் எனது பக்கத்து வீட்டில் ஒரு பஞ்சாயத்து நடந்தது. அதில் நானும் 1ம் எதிரியும் கலந்துகொண்டோம். நான் அந்த பஞ்சாயத்தை அப்போதே முடித்துவிட்டேன். ஆனால், 1ம் எதிரி என்னிடம் வந்து நான் நாளைக்கு இநத் பஞ்சாயத்தை முடிக்கலாம் என்று இருந்தேன். அதற்குள் நீ ஏன் இன்றைக்கே முடித்தாய் என்று கூறி எனது மூக்கின் மீது குத்தி விட்டார். அதில் எனக்கு மூக்கு உடைந்து இரத்தம் வந்தது. உடனே நான் எனது மனைவியுடன் எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் வீட்டிற்கு சென்றவுடன் எதிரிகள் நால்வரும் இரண்டு தடி, ஒரு கம்பி, ஒருவர் கல்லை எடுத்துக்கொண்டு எனது வீட்டிற்கு வந்து என்னை தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். எதிரி பூபதி தடியால் எனது வலது தோள்பட்டையில் ஓங்கி அடித்தார். அப்போது, எனது இளைய மனைவி சம்பு தடுக்க வந்தபோது, வலது கை மணிக்கட்டில் பட்டு காயம் ஏற்பட்டுவிட்டது. எனது மூத்த மனைவி பழனியம்மாள் தடுக்க வந்தபோது, எதிரி கண்ணன் கம்பி மற்றும் தடியால் பழனியம்மாளின் முதுகில் அடித்துவிட்டார். அப்போது கம்பி எனது வலது குதிங்காலில் பட்டு காயம் ஏற்பட்டுவிட்டது. எதிரி ராஜேந்திரன் எனது வலது தோள்பட்டையில் தடியால் அடித்தார். அதில் எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டது. எனது வேஷ்டியை எதிரிகள் உறுவிவிட்டனர். எனது மனைவி சம்புவின் புடவையையும் எதிரிகள் உறுவிவிட்டனர். பின்னர், சத்தம் கேட்டு எங்கள் ஊர் தலைவர் கரமுனியப்பன் அங்கு வரவே எதிரிகள் நால்வரும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று எனக்கு கொலைமிரட்டல் விடுத்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர். நீதிமன்றத்தில் உள்ள தடிகள் மற்றும் கம்பியால் தான் எதிரிகள் தன்னை தாக்கியதாக சாட்சி அடையாளம் காட்டுகிறார். **நீளம் அதிகமாக உள்ள மரத்தடி அ.சா.பொ.1 ஆகவும், நீளம் குறைவாக உள்ள மரத்தடி அ.சா.பொ.2ஆகவும், இரும்பு கம்பி அ.சா.பொ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், எங்களை எங்கள் ஊர் தலைவர் கார் மூலம் பவானி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தார். முதல் சிகிச்சை அங்கு பெற்றுவிட்டு, மேல்சிகிச்சைக்காக பெருந்துறை அரசு மருத்துவகல்லூரிக்கு அழைத்து சென்றோம். பவானி அரசு மருத்துவமனையில் இருந்தபோது, போலீசார் என்னை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை மேற்கொள்ளவில்லை. குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 73/2024 Crime No. 408/2023 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW2-சம்பு | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 19.03.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் கேசரிமங்களத்தில் கிராமம் குப்பிச்சிபாளையத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். நான் அ.சா.1ன் 2வது மனைவி ஆவேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்காரர்கள். கடந்த 26.10.2023ம் தேதியன்று இரவு சுமார் 09.00 மணியளவில் பக்கத்து வீட்டில் சண்டை நடந்தது அந்த சண்டைக்கு எனது கணவர் பஞ்சாயத்து பேசினார். அப்போது, 1ம் எதிரி லோகு என்பவரும் அங்கிருந்தார். அங்கு எனது கணவர் பேசிக்கொண்டிருநத்போது, 1ம் எதிரி லோகு எனது கணவரை தகாத வார்த்தைகளால் திட்டினார். ஏன் இவ்வாறு திட்டுகிறாய் என்று என் கணவர் கேட்டபோது, அவர் எனது கணவரை ஓங்கி மூக்கின் மீது குத்திவிட்டார். உடனே நான் எனது கணவரை வீட்டிற்கு கூட்டிவந்துவிட்டேன். நாங்கள் வீட்டிற்கு சென்றவுடன் எதிரிகள் நால்வரும் இரண்ட தடி, ஒரு கம்பியுடன் வீட்டிற்கு வந்து எனது கணவரை அடிக்க வந்தனர். எதிரி பூபதி கம்பியால் எனது கணவரை அடிக்கவந்தார். அப்போது, நான் தடுக்க வந்தபோது, வலது கை மணிக்கட்டில் பட்டு காயம் ஏற்பட்டுவிட்டது. எதிரி ராஜேந்திரன் தடியால் எனது கணவரை அடிக்க வந்தபோது, அதனை தடுக்க வந்த பழனியம்மாள் வந்தபோது, தடி அவர் முதுகில் பட்டு காயம் ஏற்பட்டுவிட்டது. நாங்கள் சத்தம்போடவே எதிரிகள் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று கத்திவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர். நீதிமன்றத்தில் உள்ள தடிகள் மற்றும் கம்பியால் தான் எதிரிகள் என்னையும் தனது கணவரையும் தாக்கியதாக சாட்சி அடையாளம் காட்டுகிறார். பின்னர், நாங்கள் சிகிச்சைக்காக பவானி அரசு மருதததுவமனைக்கு வந்தோம். பின்னர் மேல்சிகிச்சைக்காக பெருந்துறை அரசு மருத்துவகல்லூரிக்கு சென்றோம். பவானி அரசு மருத்துவமனையில் இருந்தபோது, போலீசார் எனது கணவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை மேற்கொள்ளவில்லை. குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 73/2024 Crime No. 408/2023 Station Bhavani

| Name | PW3-பழனியம்மாள் | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 19.03.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் கேசரிமங்களத்தில் கிராமம் குப்பிச்சிபாளையத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். நான் அ.சா.1ன் முதல் மனைவி ஆவேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்காரர்கள். கடந்த 26.10.2023ம் தேதியன்று இரவு சுமார் 09.00 மணியளவில் பக்கத்து வீட்டில் சண்டை நடந்தது அந்த சண்டைக்கு எனது கணவர் பஞ்சாயத்து பேசினார். அப்போது, 1ம் எதிரி லோகு என்பவரும் அங்கிருந்தார். அங்கு எனது கணவர் பேசிக்கொண்டிருநத்போது, 1ம் எதிரி லோகு எனது கணவரை தகாத வார்த்தைகளால் திட்டினார். ஏன் இவ்வாறு திட்டுகிறாய் என்று என் கணவர் கேட்டபோது, அவர் எனது கணவரை ஓங்கி மூக்கின் மீது குத்திவிட்டார். அதில் அவருக்கு மூக்கிலிருந்து இரத்தம் வந்தது. உடனே நான் எனது கணவரை வீட்டிற்கு கூட்டிவந்துவிட்டேன். நாங்கள் வீட்டிற்கு சென்றவுடன் எதிரி பூபதி கம்பி எதிரி ராஜேந்திரன் தடி, எதிரி கண்ணன் கல் ஆகியவற்றுடன் வீட்டிற்கு வந்து பூபதி கம்பியால் எனது கணவரின் தோள்பட்டையில் அடித்தார். சம்பு தடுக்க சென்றபோது, அவரை கம்பியால் கையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினர். கண்ணன் எனது கணவரை கல்லால் அடிக்க சென்றபோது, நான் கல்லை தட்டிவிட்டேன். அப்போது, கண்ணன் தடியால் எனது முதுகில் அடித்துவிட்டார். எதிரிகள் தேவடியா போன்ற நிறைய தகாத வார்த்தைகள் பேசினார்கள். தற்போது நீதிமன்றத்தில் உள்ள அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 வரையான சான்றுப்பொருட்களால் அடிக்கவில்லை. எதிரிகள் அடித்த தடி நீதிமன்றத்தில் உள்ள தடியைவிட நீளமாக இருந்தது. நாங்கள் சத்தம்போடவே எதிரிகள் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று கத்திவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர். பின்னர், நாங்கள் சிகிச்சைக்காக பவானி அரசு மருத்துவமனைக்கு வந்தோம். பவானி அரசு மருத்துவமனையில் இருந்தபோது, போலீசார் எனது கணவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை மேற்கொள்ளவில்லை. குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 73/2024 Crime No. 408/2023 Station Bhavani

| Name | PW4-ரமேஷ் | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 19.03.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் கேசரிமங்களத்தில் கிராமம் குப்பிச்சிபாளையத்தில் குடியிருந்து கொண்டு மெத்தை, தலையணை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்களை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்துவீட்டுக்காரர்கள் ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஊர்காரர்கள். தேதி மாதம் நினைவில்லை. கடந்த 1 ½ வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 09.00 மணியளவில் குப்பிச்சிபாளையம் வீதி அருகில் அ.சா.1க்கும் 1ம் எதிரிக்கும் வாய் தகராறு ஏற்பட்டது. பின்னர், கம்பியால் எதிரி பூபதி வீரப்பனை அடித்தார். பின்னர், சம்புவையும் பூபதி கம்பியால் அடித்தார். எதிரி ராஜேந்திரன் தடியால் வீரப்பனை அடித்தபோது, அவரது முதல் மனைவி பழனியம்மாள் தடுத்தபோது, பழனியம்மாளுக்கு அடிபட்டது. எதிரி கண்ணன் கல்லால் வீரப்பனை காலில் அடித்தார். மேற்படி சம்பவங்களை நான் நேரில் பார்த்தேன். நான் அடிபட்டவர்களை பவானி அரசு மருத்துவனைக்கு அழைத்து வந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை மேற்கொள்ளவில்லை. குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 73/2024 Crime No. 408/2023 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW5-நந்தினி | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 19.03.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் கேசரிமங்களத்தில் கிராமம் குப்பிச்சிபாளையத்தில் குடியிருந்து கொண்டு மெத்தை, தலையணை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்களை எனக்கு தெரியும். அ.சா.1 எனது கணவரான அ.சா.4ன் தாய்மாமா, அ.சா.2, 3 அ.சா.1ன் மனைவிகள். கடந்த 26.10.2023ம் தேதியன்று இரவு சுமார் 09.00 மணியளவில் அ.சா.1ன் வீட்டின் முன்னால் எதிரிகள் லோகு, பூபதி, பூபதியின் மகன், கண்ணன் ஆகியோர்கள் அ.சா.1யை அடிக்க வந்தனர். பூபதி கம்பியால் அ.சா.1யை அடித்தார். அவரது மகன் தடியால் அ.சா.1யை அடித்தார். கண்ணன் கல்லால் அ.சா.1யை அடிக்கும்போது, அவரது மனைவி பழனியம்மாள் தடுத்தபோது, பழனியம்மாளுக்கு அடிபட்டது. மேற்படி சம்பவங்களை நான் நேரில் பார்த்தேன். நானும் எனது கணவரும் அடிபட்டவர்களை பவானி அரசு மருத்துவனைக்கு அழைத்து சென்றோம். பின்னர், மேல் சிகிச்சைக்க பெருந்துறை அரசு மருத்துவகல்லூரிக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை மேற்கொள்ளவில்லை. குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 73/2024 Crime No. 408/2023 Station Bhavani

| Name | PW6-பெருமாள் | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 19.03.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் கேசரிமங்களத்தில் கிராமம் குப்பிச்சிபாளையத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்களை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்துவிட்டுக்காரர்கள் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்களும் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். தேதி, மாதம் நினைவில்லை. 1 ½ வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் சுமார் இரவு சுமார் 09.00 மணியளவில், நான் எனது வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தேன். சத்தம் கேட்டது வெளியே வந்து பார்த்தபோது, எதிரிகளும் அ.சா.1ம் ஒன்றுகொன்று அடித்துக்கொண்டார்கள். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

கடந்த 26.10.2023ம் தேதியன்று இரவு 09.00 மணியளவில் அ.சா.1ன் வீட்டிற்கு முன்பு 1ம் எதிரி அ.சா.1யை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், அவர் கையால் அ.சா.1ன் மூக்கில் ஓங்கி குத்தியதாகவும், அதில் அவருக்கு காயம் ஏற்பட்டதாகவும், அதை தடுக்க வந்த அ.சா.2யை எதிரி பூபதி இரும்பு கம்பியால் அடித்ததாகவும், 3ம் எதிரி தடியால் அ.சா.1யை அடித்ததாகவும், 4ம் எதிரி அ.சா.3யை பார்த்து தகாத வார்த்தைகளால் பேசி அவரது முதுகில் தடியால் அடித்ததாகவும், இதனை தடுக்க வந்த அ.சா.1யும் தடியால் அடித்ததாகவும், சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் வரவே, எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டதாகவும், மேற்படி சம்பவங்களை நான் நேரில் பார்த்ததாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு ஆதாயத்திற்காக, எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை-** இல்லை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 73/2024 Crime No. 408/2023 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW7-அள்ளிமுத்து | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 19.03.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் கேசரிமங்களத்தில் கிராமம் குப்பிச்சிபாளையத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்களை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்காரர்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்களும் எனது ஊர்காரர்கள். தேதி, மாதம் நினைவில்லை. 1 ½ வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் சுமார் இரவு சுமார் 09.00 மணியளவில், நான் எனது வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தேன். சத்தம் கேட்டது வெளியே வந்து பார்த்தபோது, எதிரிகளும் அ.சா.1ம் ஒன்றுகொன்று அடித்துக்கொண்டார்கள். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

கடந்த 26.10.2023ம் தேதியன்று இரவு 09.00 மணியளவில் அ.சா.1ன் வீட்டிற்கு முன்பு 1ம் எதிரி அ.சா.1யை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், அவர் கையால் அ.சா.1ன் மூக்கில் ஓங்கி குத்தியதாகவும், அதில் அவருக்கு காயம் ஏற்பட்டதாகவும், அதை தடுக்க வந்த அ.சா.2யை எதிரி பூபதி இரும்பு கம்பியால் அடித்ததாகவும், 3ம் எதிரி தடியால் அ.சா.1யை அடித்ததாகவும், 4ம் எதிரி அ.சா.3யை பார்த்து தகாத வார்த்தைகளால் பேசி அவரது முதுகில் தடியால் அடித்ததாகவும், இதனை தடுக்க வந்த அ.சா.1யும் தடியால் அடித்ததாகவும், சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் வரவே, எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டதாகவும், மேற்படி சம்பவங்களை நான் நேரில் பார்த்ததாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு ஆதாயத்திற்காக, எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை-** இல்லை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 73/2024 Crime No. 408/2023 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW8-கார்த்தி | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 19.03.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் கேசரிமங்களத்தில் கிராமம் குப்பிச்சிபாளையத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்களை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்காரர்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்களும் எனது ஊர்காரர்கள். தேதி, மாதம் நினைவில்லை. 1 ½ வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் சுமார் இரவு சுமார் 09.00 மணியளவில், நான் எனது வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தேன். சத்தம் கேட்டது வெளியே வந்து பார்த்தபோது, எதிரிகளும் அ.சா.1ம் ஒன்றுகொன்று அடித்துக்கொண்டார்கள். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. பின்னர், மறுநாள் காலை 08.00 மணிக்கு போலீசார் சண்டை நடந்த இடத்திற்கு வந்து விசாரித்து மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தார்கள். பார்வை மகஜரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், போலீசார் சம்பவயிடத்திலிருந்து தடிகள் மற்றும் கம்பியை கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகஜரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.

போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

கடந்த 26.10.2023ம் தேதியன்று இரவு 09.00 மணியளவில் அ.சா.1ன் வீட்டிற்கு முன்பு 1ம் எதிரி அ.சா.1யை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், அவர் கையால் அ.சா.1ன் மூக்கில் ஓங்கி குத்தியதாகவும், அதில் அவருக்கு காயம் ஏற்பட்டதாகவும், அதை தடுக்க வந்த அ.சா.2யை எதிரி பூபதி இரும்பு கம்பியால் அடித்ததாகவும், 3ம் எதிரி தடியால் அ.சா.1யை அடித்ததாகவும், 4ம் எதிரி அ.சா.3யை பார்த்து தகாத வார்த்தைகளால் பேசி அவரது முதுகில் தடியால் அடித்ததாகவும், இதனை தடுக்க வந்த அ.சா.1யும் தடியால் அடித்ததாகவும், சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் வரவே,

எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டதாகவும், மேற்படி சம்பவங்களை நான் நேரில் பார்த்ததாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு ஆதாயத்திற்காக, எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**- இல்லை.